வளர்க அய்யா வழி | அய்யா துணை | மலர்க தர்மயுகம்

செல்லப் பதிகள் மிகமுகித்துத் திருநாள் கண்டு மகிழ்ந்திரு நீ
சொல்ப்படி எல்லாம் அந்தத் தேதியில் தோணும் கண்டாய் – அகிலம்.

## அய்யா வைகுண்ட தர்மபதி

# இறைவனின்
# வைகுண்ட அவதார சரிதை




வைகுண்டபுரம், மணலிபுதுநகர், சென்னை – 103. போன் : 25930922/ 25930923
இணையதளம் : www.ayyavaigundadharmapathi.com மின் அஞ்சல் : ayyavaigundadharmapathitrust@gmail.com

அய்யா சரணம்

# முகவுரை

அன்புக்கொடி மக்களே!

பல லட்சம் ஆண்டுகளாக இறைவன் இந்த உலகத்தில் நிகழ்த்திய தன் நீண்ட நெடிய வரலாற்றை. அதாவது. நிகழ்ந்து நிறைவேறிய யுகச் செய்திகளோடு பின்னிப் பிணைந்துள்ள தம்முடைய அவதாரங்களுக்கான காரண காரிணங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக சங்கிலித் தொடர்போல் இணைத்து அகிலத்திரட்டு என்றஆகமத்தில் அந்த இறைவனே எழுதி நமக்கு அருளியுள்ளார். அந்த அறத்திரட்டில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களுக்குள் எழுதப்படாத எண்ணற்றசெய்திகளும். வாழ்வியல் தத்துவங்களும் உள்ளடங்கியுள்ளன.

அந்த அருள்ஞான ஆன்மீக பெருங்கடலின் சிற்றலையில் சிதறிய அமுதத்தில் சிலதுளிகளை மட்டுமே பயபக்தியோடு பருகிய நான். நான் அருந்திய அந்த ஆனந்த தேனமுதை. அருந்தி அறியாத மக்களும் எளிமையாக அறிந்து கொள்ள வேண்டுமென்றஆசைப் பெருக்கினால், என் சிற்றறிவுக்கு எட்டிய கோணத்தில் வைகுண்ட அவதார சரிதையை இங்கே சுருக்கமாக கோடிட்டு காட்டியுள்ளேன். என்னுடைய எளிமையை எண்ணிப் பாராமல் இதிலுள்ள பெருமையைப் பருகுங்கள்.

இச்சரிதையை முழுமையாக தெரிந்து கொள்ள அகிலத்திரட்டு ஆகமத்தைப் படித்து நாமெல்லாம் அய்யா என்று அழைக்கும் இறைவன் ஆளவிருக்கும் தர்மயுகச் செய்திகளையும் அறிந்து. அதன் மூலம் அய்யாவின் கருணையையும் அந்த ஆதிபரன் ஆளயிருக்கும் தர்மயுக வாழ்வையும் பெற்று பயனடைய வேண்டுமாய் அன்போடு வேண்டுகிறேன்.

வைகுண்டா சரணம்.
அன்புடன்
ஆ.மணிபாரதி,


இதனை அச்சேற்றி புத்தகமாக வெளியிட்டவர்

ஸ்ரீ சுவாமி ஸ்விட்ஸ் & பேக்கரி

13/27. ஆதியப்பன் நாயக்கன் தெரு. சொகார்பேட்டை. சென்னை - 1.
B/o. No. 1-13வது மேற்கு குறுக்குத்தெரு. M.K.B. நகர். சென்னை - 39.







உரிமை :
S.குருசாமிநாடார் மற்றும் G.சோலையம்மாள், G.மாதவன், G.வைகுண்ட வைஷ்ணவி
தொடர்புக்கு : 98402 16060

இறைவனின்

# வைகுண்ட அவதார சரிதைச் சுருக்கம்



அய்யா வைகுண்ட தர்மபதி
பள்ளியறை மணலிபுதுநகர்

ஒப்பா ரொருவ ரெழுதார் உலகில் மனுக்கள் தம்மாலே
அப்பா நாத னெழுதிவைத்த அகிலத் திரட்டம் மானையிதே
தினமொரு நேர மென்றன் திருமொழி யதனைக் கேட்டால்
பனிவெள்ளம் போலே பாவம் பறந்திடும் நிசமே சொன்னோம்
கனிமொழி சோதி வாக்கும் கையெழுத் தாதி நோக்கும்
துணிவுடன் கேட்டோ ருற்றோர் தொலைத்தனர் பிறவி தாமே - அகிலத் திரட்டு

உலகில் தர்மம் குன்றி அதர்மம் தலை தூக்கும் போதெல்லாம் இறைவன் அவதரித்துள்ளார். அப்படி அவதரித்தவரே அய்யா வைகுண்டப் பரம்பொருள்.

இறைவனுடைய எல்லா அவதாரங்களையும் அந்தந்த அவதாரத்தின் ஆரம்ப முகூர்த்தத்திலிருந்து தொடங்கி நிறைவு செய்து விடலாம்

ஆனால், வைகுண்ட அவதாரத்தை மட்டும் அப்படிச் சொல்லி நிறைவு செய்ய முடியாது.

பிரபஞ்சத்தின் தொடக்க காலத்திலிருந்து ஆரம்பித்தால்தான் வைகுண்ட அவதாரத்திற்கான காரணங்கள் பூரணமாகும்.

பரப்பிரம்மமாக இருந்த இறைவன் அண்ட சராசரத்தையும், அதிலே 84 லெட்சம் வகையான உயிரினங்களையும் படைத்தார்.

எல்லா உயிரினங்களுக்கும் இப்படி இப்படித்தான் வாழவேண்டுமென்ற இலக்கினை வகுத்த இறைவன், மனிதனுக்கு மட்டும் பகுத்தறிவைக் கொடுத்து, நல்வினை, தீவினை ஆகிய இரண்டு வினைகளையும் வைத்தார்

அது மட்டுமல்லாமல், உலகத்தை இயக்கும் பொருட்டு ஆக்கல், அருளல், காத்தல், அழித்தல், மறைத்தல் என ஐந்தொழிலையும் வகுத்து,அதற்கு அதிபதிகளாக தம்மைத் தாமே, சிவன், விஷ்ணு, பிரம்மா என்று மும்மூர்த்திகளாகப் பிரித்துக் கொண்டார்.

இறைவன் இந்த பிரபஞ்சத்தைப் பிறப்பித்ததுமே, ஏகமாய் எங்கும் நல்வினைகள் மட்டுமே வியாபித்திருந்தது. எனவே உலகில் எந்தவித நிகழ்வுகளும் ஏற்படவில்லை.

ஆகவே,உலகத்தை இயக்கும்பொருட்டு, தீ வினையின் முதல்வனாக குறோணி என்றோர் அசுரனைப் படைத்தார். அகோர வடிவத்தில் அண்டம் நிறைந்தவனாகப் பிறந்த அந்த அரக்கனுக்கோ, பிறந்த மாத்திரத்திலேயே, தாங்கொணாப் பசி உண்டாயிற்று. தம் பசிக்கு உணவாக இந்த உலகத்தை விழுங்க முனைந்தான்.

இவ்வகைப் பசிகளே உலக இயக்கத்திற்கு வித்தாகும் என்பதையுணர்ந்த மகாவிஷ்ணு, சிவ பெருமானின் அனுமதியோடு, தன்னுடைய ஞானமென்னும் ஆயுதத்தால் அந்த குறோணியை ஆறு கூறுகளாக வெட்டிக் கொன்று, அந்த அசுரனிடமிருந்து இந்த உலகத்தை காத்தருளினார். அத்துடன் குறோணியின் சகாப்தம் முடிவடைந்தது. அந்த யுகமே **நீடிய யுகமாகும்.**

அடுத்து, மும்மூர்த்திகளும் சேர்ந்து, தம்மால் மடிந்து போன குறோணியையும் இவ்வுலகில் நல்லவனாய், வல்லவனாய் வாழச் செய்ய வேண்டுமென்றெண்ணி குறோணியின் முதல் துண்டத்தின் அம்சமாக குண்டோமசாலியைப் படைத்தார்கள்.

அந்த குண்டோமசாலியால் இந்த உலகமே அமைதியற்று தவித்தது. எனவே அவனையும் மகா விஷ்ணு, தேவர்களின் துணையோடு தூண்டிலில்

சிக்கவைத்துக் கொன்றார், அதுவே **சதிர் யுகமாகும்**

சதிர்யுகம் நிறைவு பெற்றதுமே தேவர்களெல்லாம் மும்மூர்த்திகளையும் அணுகி, சுவாமி! நிகழ்ந்து நிறைவேறிய இரண்டு யுகங்களிலும் அறிவு சற்றும் இல்லாத அசுரர்களைத்தான் பிறவி செய்து அழித்தீர்கள். அதனால் தேவர்களாகிய எங்களின் பெருமையும், தெய்வங்களாகிய உங்கள் சிறப்பும் வெளிப்பட வழியற்றுப் போயிற்று.

ஆகவே, அடுத்து தாங்கள் படைக்கும் அசுரர்களை, அறிவில் சிறந்தவர்களாகவும், வரவலிமை பெற்றவர்களாகவும் மானிட இயல்புகளோடு பிறவி செய்யுங்கள் என்று முறையிட்டார்கள்.

தேவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மும்மூர்த்திகளும், குறோணியின் இரண்டாவது துண்டின் அம்சத்தின் மூலமாக தில்லை மல்லாலன். மல்லோசி வாகனன் என்ற இரண்டு அரக்கர்களை அறிவுத் திறமையுடையவனாகப் படைத்தனர்.

வரவலிமை பெற்ற அவ்விரு அசுரர்களும், புனல் ரிஷியின் தவத்தைக் கெடுத்து, அவருடைய சாபத்தின்படி, மகாவிஷ்ணு எய்த மந்திர புரக்கணையால் மாண்டனர். அந்த யுகமே **நெடிய யுகமாகும்.**

அடுத்ததாக, குறோணியின் மூன்றாவது துண்டத்தின் அம்சத்தின் மூலமாக, சூரபத்மன், சிங்கமுகா சூரன் என்ற இரண்டு அரக்கர்களை பிறப்பித்தனர். ஐமுகனாலும் கொல்ல முடியாத வரங்களைப் பெற்றஅந்த அரக்கர்களை மகாவிஷ்ணு, ஆறுமுகக் கடவுளாக அவதரித்து, சக்தி என்னும் வேலினால் கொன்றார்.

அறிவுத் திறனோடு பிறந்து பக்திப் பெருக்கினால் பல வரங்களைப் பெற்றிருந்தும், சூரபத்மன் சாகும் நேரத்தில் ஆறுமுகக் கடவுளைப் பார்த்து, வேலினால்தான் என்னை வென்று கொன்றாயே அல்லாது, உன்னால் என்னைக் கொல்ல ஒருபோதும் முடியாது என்று வீராப்பு பேசினான்.

ஆகவே அதே யுகத்தில், சூரனையே மீண்டும் இரணியனாகப் பிறப்பித்து, மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரமாகத் தோன்றி ஆயுதமே எடுக்காமல் தன்னுடைய நகத்தால் இரணியனைக் கொன்றபோது, பத்துப் பெரிய மலைகளைப் பார நகமாக பதித்து வைத்தே இத்தலத்தில் என்னைக் கொன்றாய் என்று நரசிம்ம மூர்த்திடம் இரணியன் எக்காளமிட்டான். அதுவே **கிரேதாயுகமாகும்**



காளை வாகனத்தில்
அய்யா பதிவலம் வருதல்

அடுத்து, பத்து நகங்களுக்குப் பதிலாக பத்து தலைகளோடும் படைபலத்தோடும் குறோணியின் நான்காவது துண்டத்தின் அம்சத்தின் மூலமாக இராவணனைப் படைத்தார்கள்

மகாவிஷ்ணுவோ, ராமபிரானாக அவதரித்து, ராமபாணத்தினால், ராவணனைக் கொல்லும்போது, ராமபிரானைப் பார்த்து, எனக்குத் தம்பியெனப் பிறந்து, சத்துருவாய்ச் சமைந்த விபீஷணன், என்னுடைய உயிர் நிலையை உன்னிடம் சொன்னதினால் தான் என்னைக் கொன்றாயே அல்லாமல், உன்னால் என்னைக் கொல்ல முடியாது போடா என்று ராவணன் கர்ஜித்தான்.

அப்போது ராமபிரான், ராவணனிடம் சொல்லுகிறார்...
உன்னுடைய தம்பியாலே உயிர்நிலை அறிந்து யானும்
என்னுடைய சரத்தால் கொன்றேன் என்று இயம்பிய அரக்கா உன்னை
பின்னுகப் பிறப்பு தன்னில் பிறப்பு நூறோடுங் கூடி
அன்னுகம் தன்னில் தோன்றஅருளுவேன் நானுமுன்னை
என்னொரு தம்பியாலே என்னையும் கொன்றாயென்று
தன்னொரு மதத்தால் நீயும் சாற்றிய அரக்கா உன்னை
பின்னொரு யுகத்தில் நூறு பேருடன் பிறவி செய்து
இன்னொரு ஆளின் கையால் இறந்திடச் செய்வேன் உன்னை
- அகலத்திரட்டு


அன்னவாகனத்தில்
அய்யா பதிவலம் வருதல்

இப்படி ராவணனின் மரணத்தோடு முடிவுற்றயுகமே **திரேதாயுகமாகும்.**

அடுத்து, குறோணியின் ஐந்தாவது துண்டத்தின் அம்சத்தின் மூலமாக அன்று ராவணனிடம் சொன்னபடியே, துரியோதனாதிகளைப் படைத்தார். அவர்களோ பாண்டவர்களைப் பகைத்தனர். கிருஷ்ண பரமாத்மாவாக அவதரித்த மகாவிஷ்ணுவோ, பாண்டவர்களுக்குத் துணையாக நின்றார். பாரதப் பெரும்போரில் வீமனின் தண்டாயுதத்தால் அடிபட்டு வீழ்ந்த துரியோதனனைப் பார்த்து, இப்போதாவது உனக்கு மேலான ஒரு சக்திதான் உன்னை இயக்குகிறது என்பதை ஒப்புக் கொள்கிறாயா? என்று கேட்ட கிருஷ்ண பரமாத்மாவிடம், என்னுடைய பங்காளியான வீமன் தான் என்னைக் கொன்றானே அல்லாது, உன்னாலே என்னைக் கொல்ல ஒருபோதும் ஆகாது என்று, குற்றுயிராய்க் கிடந்த துரியோதனன் கொக்கரித்து மாண்டான்.


கருட வாகனத்தில்
அய்யா பதிவலம் வருதல்

அதைக் கேட்ட கிருஷ்ண பரமாத்மா, துரியோதனா நீ குரோணியாக பிறந்ததிலிருந்து இதுவரை நடந்த ஆறு யுகங்களில், ஏழுமுறைஉன்னை பிறப்பித்து விட்டோம்.

பிறப்பித்த உன்னை இப்படிக் கொல்ல வேண்டும் என்பது எமது எண்ணம் இல்லை. எனவேதான், உன்னுடைய ஒவ்வொரு பிறப்பிலும் உனக்குப் புத்திமதி சொல்ல ஒவ்வொருவரை அனுப்பி வைத்தோம்.

எவருடைய அறிவுரைகளையும் ஏற்றுக் கொள்ளாத நீ, உன்னுடைய ஒவ்வொரு பிறப்பிலும், உன்னுடைய மரணத்திற்கு, ஏறுக்கு மாறான காரணங்களையேச் சொல்லுகிறாய்.

அதுவே, உன்னுடைய இத்தனை பிறப்புகளுக்கும் காரணமாகி விட்டது. இப்போதும் உன்னுடைய மரண வாக்குமூலம் தவறாகவே உள்ளது.

எனவே, அடுத்து வரும் கலியுகத்தில் உன்னைச் சின்னா பின்னமாக, அதாவது பற்பலவாக, கலியுகத்தின் ஆயுள் காலம் முடியும் வரை பிறப்பிப்போம். அப்போதும் எம்முடைய வல்லமைகளைப் பற்றி நீ உணராமல் இருந்தால், யாம் கலியுகத்தில், ஒரு சராசரி மனிதனைப்போல் அவதரித்து, அன்பைப் படையாகத் திரட்டி, பொறுமை என்னும் தடுப்பாயுதத்தால் உன்னுடைய கொடுமைகளை அடக்கி, தருமம் எனும் வாளால் உன்னை மாழச் செய்வேன் என்று சூளுரைத்தார்.

அங்கேதான் துரியோதனின் சகாப்தம் நிறைவு பெற்றது. அதுதான் **துவாபரயுகம்.**

அந்த யுகத்தில் வயது முடியப் போவதை உணர்ந்த கிருஷ்ண பரமாத்மா, தன்னுடைய காரண சரீரமாகிய கிருஷண அவதாரக் கூட்டை உகுத்து வைப்பதற்காக பர்வதாமலை நோக்கி வேகமாகச் செல்லும் வழியில் குறுக்கிட்ட கலைக்கோட்டு மாமுனிவர், சுவாமி ! தங்களின் இந்த வேகமான பயணத்திற்கு விடையாது என வினவினார்.

அதற்கு கலியுகம் வரப்போவதையும், தம்முடைய கிருஷ்ண அவதாரம் நிறைவடைந்து விட்டதையும் தெரிவித்த கிருஷ்ண பரமாத்மாவிடம், சுவாமி வரப்போகும் கலியுகம் எத்தகைய இயல்புடையதாக இருக்கும்? அந்தக்கலியுகத்தில் தாங்கள் எவ்வாறு அவதரித்து கலியை முடிப்பீர்கள்? என்று கேட்ட கலைக்கோட்டு மாமுனிவருக்கு கிருஷ்ண பரமாத்மா சொல்லுகிறார்,



மயில் வாகனத்தில்
அய்யா பதிவலம் வருதல்

மாமுனியே நீகேளு வஞ்சக நீசக்கலியை
நான் முன்னின்று கொல்ல ஞாயமில்லை கேட்டிடுநீ
கலியனுடகண் கண்டால் பவஞ் சூழும்
திலியன் அவனுயிரைச் ஜெயிக்க எவரால்முடியும்
முன்னின்று கொல்ல மூவராலும் அரிது
பின்னின்று அவனவனால் பேசாது மாளவைப்பேன்
வல்லமையுங் காட்டேன் மானீசன் கண்முன்னே
நில்லாமல் நின்று நீசன் தனையறுப்பேன்
அற்புதமும் செய்யேன் அந்நீசன் கண்முன்னே
உற்பனமுங் கொடேன் ஒன்றறியா நின்றிடுவேன்
வந்தனெனச் சொல்வார் வரவில்லை என்றிடுவார்
என்றன் பெயர்காணோம் யாரோவெனச் சொல்வார்
இதோ வந்தானென்பார் இவனில்லை என்றிடுவார்
அதோ வந்தானென்பார் அவனில்லை என்றிடுவார்
இப்படியே சூட்சமொன்று எடுப்பேன் நான் மாமுனியே
எப்படியும் உள்ளறிவோர் எனையறிவார் மாமுனியே - அகிலத்திரட்டு

இவ்வாறு கலைக்கோட்டு மாமுனிவரிடம் சொல்லிவிட்டு, பருவதாமலைக்குச் சென்று தம்முடைய உபாய மாய உடலை, அங்கே ஓர் வேடனிட்ட, அம்பால் செத்ததுபோல் உகுத்து வைத்துவிட்டு, தனக்கே உரித்தான சூட்சும சரீரத்தோடு அயோகவனம் சென்று சப்த மாதர்களின் கற்பை சோதித்து, சப்தலோக வித்துக்களை அவர்கள் மூலம் மனிதர்களாக மண்ணுலகத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, மகாவிஷ்ணு ஸ்ரீரங்க மாபதியில் சென்றமர்ந்தார்.

அப்போது தேவர்களெல்லாம் கூடி சிவபெருமானிடம் சென்று, ஈசனே ! கலியுகம் பிறக்கவேண்டிய காலம் இது என முறையிட்டதோடு, குறோணியின் ஆறாவது துண்டத்தின் மூலம் கலியரக்கனைப் பிறவி செய்யச் சொன்னார்கள். அதைக் கேட்ட சிவபெருமான், மகாவிஷ்ணுவை எதிர் பார்த்தார்.



ஆஞ்சநேயர் வாகனத்தில்
அய்யா பதிவலம் வருதல்

ஈசனின் எண்ணத்தை உணர்ந்த தேவர்களோ, மகாதேவா ! தம்முடைய ஒன்பதாம் அவதாரமாகிய கிருஷ்ண அவதாரத்தை நிறைவுசெய்த மகாவிஷ்ணு, தம்முடைய பத்தாம் அவதாரத்தை எடுப்பதற்காக பாருலகில் மாண்டு கிடக்கிறார் என்றனர். தேவர்களின் இவ்வுரையே, பிற்காலத்தில், அதாவது கலியுகத்தில், அவர்கள் பிறவி எடுக்கக் காரணமாக கற்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

தேவசங்கத்தார் சொன்ன செய்தியை உணர்ந்த சிவபெருமான் கலி அரக்கனைப் பிறவி செய்ய திரு உள்ளமானார்.

ஈசன் அப்படி நினைத்த அடுத்த கணமே, பிறப்பு விதிகளுக்கெல்லாம் மாறுபட்ட நிலையில் குறோணியின் ஆறாவது துண்டத்தின் அம்சமாக மண்ணைப் பிளந்துகொண்டு மானீசக் கலியன் வெளிப்பட்டான்.

இவ்வண்ணமாக மாயக் கலிநீசன் பிறந்ததுமே, மண்ணுலகில் வாழுகின்ற மாந்தர்களின் சிந்தை பீடத்தையெல்லாம் அவன் அமருகின்ற சிம்மாசனமாக்கிக் கொண்டான்.

இன்னிலை ஏகமெங்கும் வியாபிக்கவே, எல்லா மக்களின் மனங்களிலும் இனம்புரியாத ஓர் மாற்றம் ஏற்பட்டது.

கள்ளம், கபடம், வாது, சூது, வம்பு, வழக்கு, பேராசை, பொறாமை, வஞ்சகம் ஆகிய தீய குணங்கள் அனைவரது மனதையும் ஆக்கிரமித்துக் கொண்டது.

பஞ்சமா பாதகங்களைக் கூட அஞ்சாமல் செய்யும் நெஞ்சுறுதி, நிலவுலகெங்கும் நீக்கமற நிறைந்திருந்தது. அதுவே **இக்கலியுகமாகும்.**

உலக நியதிகளுக்கு மாறாக உருவமில்லாமல் பிறந்த கலி என்னும் மாயை, ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஊடுருவிப் புகுந்துவிட்டதால், அவரவர்த் தகுதிக்கேற்ப தன்னைவிட எளியோர்களை அடிமைகளாகக் கருதி அடக்கியாள முனைந்தனர். காலப்போக்கில் அதுவே சாதி வெறியாக மாறியது.

மண்ணாண்ட மன்னர்களோ, ஆதிக்க வெறியர்களாக மாறினர். அதற்கு தலைமையாக வாய்த்தவரே அன்றைய திருவாங்கூர் மன்னன்

இவர், மேல்தட்டு வர்க்கத்தினரின் பரிந்துரையால் பாமரமக்களையெல்லாம், விவரிக்கவே முடியாத அளவில் வரிக் கொடுமைக்குள்ளாக்கி வாட்டி வதைத்தார்.

மேட்டுக் குடியினரோ, குடிதாழ்ந்த மக்களையெல்லாம், கூலியே கொடுக்காமல் வேலை வாங்கினார்கள். அத்துடன் அந்த அபலைகளை விட்டுவிடவில்லை, செய்த வேலைக்குச் சம்பளமாக சாட்டையடி கொடுத்து அனுப்பினார்கள்.

இக்கொடுமைகள் காலப்போக்கில் தீண்டாமை என்னும் தீய சக்தியாக உருமாறியது. படைத்த இறைவனின் பெயரால் எழுப்பப்பட்டிருக்கும் கோயில்களின் நிழல்களில் கூட பதினெட்டு சாதியினர் ஒதுங்க முடியாத நிலை உருவானது.

இப்படிக் காட்டு மிராண்டித்தனமான கொடுமைகள் கோலோச்சிய அந்த காலக்கட்டத்தில்தான், திருவனந்தபுரத்திலுள்ள பத்மநாப சுவாமி திருக்கோவில் விக்கிரகத்தில் மகாவிஷ்ணு எழுந்தருளி, அசரியாக அன்றைய மன்னனுடைய ஆட்சியில் உண்டான குறைநிறைகளை எடுத்துக் கூறி மன்னனுக்கு புத்திமதி போதித்தார்.

மன்னனோ மனம் திருந்தவில்லை, மாறாக நீ எந்த பாமரர்களுக்காக இப்போது பரிந்து பேசுகிறாயோ, அவர்களிடம் வரியாக வசூலிக்கும் பணத்தில்தான் உனக்கு தினந்தோறும் நூறுபொன் செலவு செய்து பூசை புனஸ்காரம் நடத்துகிறேன்.

எனவே, இதை ஏற்றுக் கொண்டு இங்கே இருக்க முடியுமானால் இரு, இல்லையென்றால் அந்த அடிமைகளோடு நீயும் போய்விடு என்றான். இதனால் மன்னனிடம் கோபம் கொண்ட மகாவிஷ்ணு, மன்னனைப் பார்த்துச் சொல்லுகிறார்...

போறேன் நானுன்னுடைய புரத்தைவிட்டு செந்தூரில்
வாறேன் நானுன்னை வதைக்கவொரு கோலமிட்டு
எளிய சாணானெனவே எண்ணம்வைத்து என்றனையும்
நளியாய் மிகப்பேசி நகைத்தாயே மாநீசா
எளியோர் வலியோர் எவர்க்கும்வெகு நன்மைசெய்து
வெளியாக உன்றனக்கு விபரம் போதித்தருளி
நீயறியத் தர்மம் நீணிலத்திலே நடத்தி
பேய்வெறியைக் கொன்று பேருலகம் அத்தனையும்
நாடாள்வார் தமக்கு நான்பட்டமுஞ் சூட்டி
ஒருபுத்தியாகி உள்ளென்னைக் கொண்டோர்க்கு
புதுப்புத்தி ஈந்து பூலோகம் ஆளவைப்பேன்

– அகிலத்திரட்டு



சர்பவாகனத்தில்
அய்யா பதிவலம் வருதல்

இவ்வாறு மன்னனிடம் சொல்லிவிட்டு உமையவளின் அழைப்பை ஏற்று சிவபெருமானிடம் சென்றார், மகாவிஷ்ணு.

சிவபெருமானோ, மகாவிஷ்ணுவை வாரி அணைத்துக்கொண்டு, மாயவா ! கல்லை வலித்திழுத்து காலில் மிகப் போட்டதுபோல், தேவர்களின் சொல்லைக் கேட்டு, உம்மைக் கேளாமல் கலியைப் படைத்துவிட்டேன். வல்லவனே இக்கலியை இக்கணமே மாற்றுமென்றார். உடனே, மகாவிஷ்ணு சிவபெருமானைப் பார்த்துச் சொல்லுகிறார்,

சிவனே உமக்குச் சூடெண்ணம் சற்றுமில்லை
இருப்பில் இருந்துகொண்டு எனக்கலச்சல் செய்வதுண்டு,
எதிர்ப்பவர் யார்சொல்லும் இந்தமாய் மாலமொடு
கலியென்றபேச்சுக் காதில்மிகக் கேட்டதுண்டால்
சலிவாகி மேனி சடலம் இருளாகுதல்லோ
மெய்பேச வேணுமென்று மேவி இருந்தாலும்
பொய்பேசப் புத்தி பொலியும் பொடுபொடென
வாளாயுதத்தாலும் வாய்த்த கணை அம்பாலும்
பாழாக்க வென்றால் படாதே மாகலிதான்
மற்றப்பிறவியாக வகுத்தாலும் இவ்வுலகில்
இத்தனை எண்ணம் இல்லையே என்றனக்கு
அய்யோ என் மக்கள் அதற்குள் அகப்பட்டனரே
மெய்யோ இனிமக்கள் விளங்குவது எக்காலம்

– அகிலத்திரட்டு



மலர்முகசிம்மாசன வாகனத்தில்
அய்யா பதிவலம் வருதல்

இவ்வாறு சிவபெருமானிடம் வருந்தி உரைத்த மகாவிஷ்ணு, தாம் இல்லாமல் கலியை படைக்கக் காரணமான விண்ணவர்களையெல்லாம், மண்ணகத்தில் தாம் எடுக்கப்போகும் வைகுண்ட அவதாரத்திற்கு ஆதரவாக பிறப்பிக்க எண்ணி, சப்தமாதர்கள் மூலமாக பூலோகத்தில் பிறந்திருப்போரின் பிற்கிளைகளாக அவர்களைப் பிறக்க வகை செய்தார்.

அதன்பிறகு, மும்மூர்த்திகளும் சேர்ந்து ஆலோசித்தார்கள், அதாவது, இதற்கு முன்பு நிகழ்ந்த யுகங்களில் பிறந்த அரக்கர்களுக்கெல்லாம் உடலும், படையும் இருந்தது. ஆகவே, அவர்களை அடையாளம் கண்டு, அந்த அரக்கர்களுக்கு நிகரான பலத்தில் ஒரு மூர்த்தி மட்டும் அவதரித்து அழிக்க முடிந்தது.

ஆனால் இந்தக் கலியுகத்து அரக்கன் உடலற்றுப் பிறந்துவிட்டதால், எல்லா மக்களின் மனதிலும் மாயையாகப் புகுந்து அனைவரையும் கலியர்களாக்கிவிட்டான். எனவே, இவர்களை ஆயுதமேந்தி அழிக்க முனைந்தால் உலகத்தில் மனித குலமே இல்லாமல் ஆகிவிடும்.

ஆகவே, உலகத்திலுள்ள அனைத்து மக்களின் மனத்திலும் பொறுமையை விதைக்க வேண்டும். தருமத்தை வளர்க்க வேண்டும். அன்பை விளைவிக்க வேண்டும்.

அப்படியென்றால் தான் மக்களின் மனங்களில் மாசுபோல் மண்டிக்கிடக்கும் கலிமாய உணர்வுகளை சுத்தமாகத் துடைக்க முடியும். அப்படி மட்டும் துடைத்து விட்டோமேயானால், கலியரக்கன் இருக்க இடமற்று அடிமாய்ந்து போவான்.

அதற்கு ஒரே வழி, மும்மூர்த்திகளாக இருக்கும் நாம், மூவரும் ஒரே மூர்த்தியாகி, பூலோகத்திற்குச் செல்வதுதான் என்று மும்மூர்த்திகளும் சேர்ந்து ஏகமனதாக முடிவு செய்தனர்.

அப்படி ஏகமூர்த்தியாக அவதாரம் செய்ய வேண்டுமானாலும் பூலோக நியதிப்படி அதற்கோர் காரண சரீரம் வேண்டுமே என்றசிந்தனை எழுந்தது.

உடனே, அரூபியாகிய மகாவிஷ்ணு அவதாரம் எடுக்கும் போதெல்லாம் பயன் படுத்திய காரண சரீரத்தை இந்த கலியுக அவதாரத்திற்கும் பயன்படுத்தலாமென எண்ணி, தேவலோகத்தைச் சேர்ந்த சம்பூரணத்தேவனின் உயிரை கிருஷ்ண அவதாரக் கூட்டில் இணைத்து, குமரி மாவட்டத்தில், பூமகளின் புருவமத்தி எனப் போற்றப்படும் சாமித் தோப்பில் வாழ்ந்து கொண்டிருந்த அன்னை வெயிலாளின் மணி வயிற்றில் பிறப்பித்தார்கள்.

கர்மக் கடன்கழிக்க கலியுகத்திலே பிறக்க
தர்மசம் பூரணனைத் தரணிப் பிறவி செய்தார்
செய்த சடமதையும் சுமக்கச் சடம்பார்த்து
மெய்யிசையும் நாதன் மேதினியில் செய்தனராம்
சடம்பிறக்க லோகம் தட்டுமிக மாறி
உடன் பிறக்கச் செய்தார் உலகளந்தோர்
கற்பனையால் - அகிலத்திரட்டு



குதிரை வாகனத்தில்
அய்யா பதிவலம் வருதல்

அன்னை வெயிலாளின் மணி வயிற்றில் பிறந்த சம்பூரணத் தேவன் எல்லாருக்கும் நல்லவராய், எதிர்த்தோர்க்கு வல்லவராய், பாசம் மிகுந்தவராய், பண்பில் சிறந்தவராய், அன்பில் உயர்ந்தவராய், பக்தி மிகுந்தவராய், பாராட்டுதலுக்குரிய நீதிமானாக உலகிலே வாழ்ந்து கொண்டிருந்தார்.

வயது இருபத்திரெண்டை எட்டியபோது கைகால் இயங்காப்பிணி ஏற்பட்டு இகாபரா தஞ்சம் என்று படுத்த படுக்கையானார்.

பாராத மருத்துவரில்லை. அருந்தாத மருந்துகளும் இல்லை,. ஏங்கி அழுதாள் ஈன்றதாயார். ஆண்டுகள் இரண்டு உருண்டோடிப் போயிற்று. அன்னையின் கனவில் இறைவன் தோன்றினார். திருச்செந்தூர் திருத்தலத்தில் நடைபெறும் திருவிழாவிற்கு உன் மகனை அழைத்து வா என இறைவன் ஆணையிட்டார்.

அன்னை வெயிலாளோ, மகனின் நலன் கருதி, உறவினர்களின் துணையோடு, தொட்டிலொன்று கட்டி, திருச்செந்தூருக்கு மகனைத் தூக்கிச் சென்றார்கள்.

அப்போது தான், கலியுகத்திற்காக கடவுள் பூரண அவதாரமாகப் பூமியில் வருவதற்கான காலமும் கனிந்தது. எனவே, மகாவிஷ்ணு தன் அருகில் இருந்த இரு அரூப முனிவர்களை அழைத்து...



காமதேனு வாகனத்தில் அய்யா பதிவலம் வருதல்

நான் நியமித்த நல்லவுயிர் ஆனதிங்கே
தானே வருகுதுகாண் என்றன் தவத்தாலே
எதிரேபோய் நீங்கள் இங்கழைத்து வாருமென்றார்
– அகிலத்திரட்டு

மகாவிஷ்ணுவின் இந்த கட்டளையை நிறைவேற்றவந்த இரண்டு முனிவர்களும், சம்பூரணத் தேவரின் திருமேனியைக் கண்டதும், கிருஷ்ண பரமாத்மாவின் உடலல்லவா இது என்ற உணர்வோடு, வணங்கி நமஸ்கரித்து, இயங்காமலிருக்கும் அந்தத் திருமேனியை இருபுறமும் நின்று தம்முடைய தோள்களில் தாங்கி குதிரை நடை கொண்டது போல் சுமந்து கொண்டு மகாவிஷ்ணுவிடம் வந்தனர். உடனே, அந்த முனிவர்களைப் பார்த்து மகாவிஷ்ணு சொல்கிறார்...

மேலுள்ள சடலந் தன்னை மிகுமுனி மாரே நீங்கள்
நாலுள்ள தெருக்கள் தோறும் நடத்தியே தரையிலூட்டி
பாலுள்ள பதத்தில் கொண்டு பழவினை தீரக் காட்டி
மாலுள்ளம் புகுத நாட்டி வாருங்கோ சிணமே யென்றார் – அகிலத்திரட்டு

அந்த அரூப முனிவர்களோ, மகாவிஷ்ணுவின் இந்த கட்டளையைக் கையாண்டனர். ஆனால், இந்த சம்பவமோ, சம்பூரணத்தேவரைப் பெற்ற தாயின் கண்களுக்கும், அவரைத் தூக்கிச் சென்ற உறவினர்களின் கண்களுக்கும், சம்பூரணத்தேவர் உடல் நலம் பெற்று தீர்த்தமாட கடலில் இறங்குவதாகவே தெரிந்தது. சிறிது நேரத்தில் சம்பூரணத்தேவரைக் காணாமல் கதிகலங்கிப் போனார்கள். பெற்றபிள்ளையை கொண்டுவந்து கடலுக்கு இரையாக்கி விட்டோமே என்று அன்னை வெயிலாள் அலறினாள், கதறினாள், அந்தக் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டு கதியற்று நின்றாள்.

அப்போது, வைகுண்டப் பரம்பொருளை இந்த உலகத்திற்கு தருவதற்காக திருச்செந்தூர் திருப்பாற்கடலுக்குள் சிகரகோபுரத்தோடு கூடிய மகர அரங்கமாக வளர்ந்து நின்ற அலைமகளாகிய அன்னை லட்சுமி தேவியின் அருகிலே சென்ற மகாவிஷ்ணு...

மகரமுன் சென்று மகனைமிக நினைக்க
உகரமுனி கூட்டிவந்த உற்றசடலமது
சிணமே கடலுக்குள் சென்றதுகாண் அன்போரே – அகிலத்திரட்டு

இவ்வண்ணமாக கடலுக்குள் சென்ற சம்பூரணத்தேவரின் சடலத்தை, அதாவது யுகாந்திரங்கள் தோறும் தம் அவதாரங்களுக்குப் பயன்படுத்திய அந்த காரண சரீரத்தை, அலைமகளாகிய அந்த மகர அரங்கத்திற்குள்ளே வைத்து, மீண்டும்

குழந்தையாக்கி, மும்மூர்த்திகளும் அதனுள்ளே உறைந்து, ஒரு மூர்த்தியாக, வாலிப வயதுடைய வைகுண்டப் பரம் பொருளாக இறைவன் வையகத்திற்கு எழுந்தருளினார்.

அந்நேரம் கடலுக்குள் போன மகனைக் காணவில்லையே என்று மூன்று நாட்களாக முறையிட்ட அன்னை வெயிலாள், அலைகடல் அருகே தலைவிரி கோலமாக நீறாகி நின்றாள்.

கலிமுடிக்க வந்த அந்தக் கடவுள், அன்னை வெயிலாளுக்குத் தன்னைக் காட்டுகிறார். அந்த காரணத் திருமேனியை கண்ணுற்ற அன்னையோ, வந்துவிட்டாயா மகனே என்று வாரியணைக்கத் துடிக்கிறாள். அந்த அன்னைக்கு ஆறுதல் அளிப்பதற்காக இறைவன் சொல்கிறார்...


இந்திர விமான வாகனத்தில்
அய்யா நகர்வலம் வருதல்

ஆண்டா யிரத்தெட்டு முன்னே அன்னை யெனவே நீயிருந்தாய்
கூண்டா மெட்டா மாசியிலே குணமாய் நாராயணர் மகவாய்
சான்றோர் கெதிகள் பெற்றிடவே தர்ம குண்டம் பிறந்துவொரு
குன்றாக் குடைக்கு ஏரசாளக் கொண்டே போறேன் கண்டிருநீ
வைகுண்டம் பிறந்து வார்த்தை யென்றோர் குடைக்குள்
பொய்கொண்ட பேரைப் பெலிசெய் தரசாள
கொண்டுநான் போறேன் குலக்கிழடே பாரெனவே
அன்றுவை குண்டர் அவர்நடந்தார் தெச்சணத்தில்

- அகிலத்திரட்டு

இப்படி அன்னை வெயிலாளுக்கு அறிவுரை கூறி ஆறுதலளித்துவிட்டு, தெட்சணம் நோக்கி வந்த வைகுண்டப் பரம்பொருள், தான் படைத்த உலகத்தை கலிமாயையிடமிருந்து மீட்டுவதற்காக தம்மை நினைத்து, தம்மையே வருத்தி தவம் செய்யலானார். தவத்தவனாகக் காட்சியளித்த அந்த தயாபரனைக் காண, தணிந்த இடத்திற்கு ஓடி வரும் வெள்ளம்போல் அங்கே ஜனவெள்ளம் சங்கமித்தது, சாமியார் என்று நினைத்து வணங்கினர்.

அந்த மாயாதி சூட்சனோ, அவர்களின் நெஞ்சத்தில் தருமப்பயிரை விதைத்தார். அன்பை வளர்த்தார். பொறுமையை போதித்தார். மூட நம்பிக்கைகளை முற்றிலும் துறக்கச் செய்தார். சாதிமத பேதங்களுக்கு சாவுமணி அடிக்கச் செய்தார். ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்ற தலையாய தத்துவத்தை தாரணிக்குப் புகட்டினார். தண்ணீரையும் மண்ணையும் தரும மருந்தாகக் கொடுத்து, மக்களின் நோய் பிணி நொம்பலங்களையெல்லாம் துடைத்தார்.

தெய்வ வழிபாட்டிலோ புதியதோர் பரிமாணத்தை ஏற்படுத்தி, அனைத்து மக்களையும் ஆன்மீக ஞானிகளாக்கி ஆனந்தமடைந்தார்.

அந்த விண்ணகத்தரசனின் வேத உரைகளும், அரவணைப்பும் மண்ணகத்து மக்களின் எண்ணங்களைக் கவர்ந்தது. எனவே, எல்லா மக்களும் அந்த ஆதிபரனை அய்யா என அழைத்து ஆனந்தமடைந்தனர்.

ஐந்து ஆண்டுகளுக்குள் சாமிதோப்பு ஜன சமுத்திரமாக மாறியது. இந்நிலை அதிகார வர்க்கத்தினரின் கண்களை உறுத்தியது. இந்த சாமியார் சாமிதோப்பில் ஒரு சமதர்ம சாம்ராஜ்ஜியத்தையே உருவாக்குகிறார் என்று, திருவாங்கூர் மன்னனிடம் முறையிட்டனர்.

அன்றொருகால், பண்டாரங்களைப் பகைக்கமாட்டேன் என்று விஷ்ணுவிடம் சத்தியம் செய்து கொடுத்தான் அந்த கலியரக்கன். இன்றோ பண்டாரமாக வந்த இந்தப் பரம்பொருளைப் பகைத்து, திண்டாடும் நிலைக்குத் தள்ளப்படுகிறான் இந்தக் கலியரசன்.

எனவே, அந்த சர்வேஸ்வரனுக்கோர் சாதி சாயத்தைப் பூசி அவரைச் சிறைபிடித்து வரும்படி படையனுப்பினான் கலியரசன்.

ஆறுகால் கட்டிலில் காவி விரித்த தொட்டிலில், தெய்வமும் அவராய், திருவுள்ளமும் அவராய், மக்கள் அறிய மனிதனைப் போலும் காட்சியளித்த அந்த மாயாதிசூட்சனை, கலிநீசப் படைகள் கையில் ஆயுதங்களோடு சுற்றி வளைத்தனர். வாயில் வந்தபடி எல்லாம் வசைமாரி பொழிந்தனர்.

கலிமுடிக்க வந்த கடவுளை கைது செய்து, ஆலகால விஷத்தைக் கொடுத்தனர். சுண்ணாம்புக் காளவாயில் வைத்து நீற்றினர். மிளகு வத்தலை வைத்து மூட்டம் போட்டனர். மலையளவு விறகில் தீயிட்டு அந்த நெருப்பிலே நடந்து வரச் செய்தனர். இவையாவையும் அய்யா இன்முகத்தோடு ஏற்று மகிழ்ந்தார்.

இப்படி மனசாட்சியே இல்லாமல், பலவகையான சித்திரவதைகளுக்கு அய்யாவை உட்படுத்தி தோற்றுப்போன அந்த கலியரசன், இறுதியாக தம் படைகளை அனுப்பி காட்டுப் புலியைப் பிடித்துவரச் செய்தான். அதை அறிநத அன்புக்கொடி மக்கள் அய்யாவிடம் வந்து வெம்பி அழுதனர்.

அய்யாவோ, அந்த அன்பர்களைப் பார்த்து என்னால் படைக்கப்பட்ட மனிதன் என்னை தெரிந்து கொள்ளவில்லை என்றால், நான் படைத்த மிருகமுமா என்னைப் பற்றி அறியாமல் இருக்கும், கவலைப்பட வேண்டாம் என்று ஆறுதல் கூறினார்.

புலியை மூன்று நாட்கள் பட்டினிபோட்டு, மறுநாள் அந்தப் புலிக்கு இரையாக அய்யாவை அந்த புலிக் கூட்டினுள் தள்ளினர். கோபத்தால் குமுறிக் கொண்டிருந்த அந்தக் கொடும்புலி, படைத்த அந்த பரம்பொருளைக் கண்டதும் அவருடைய பாதங்களில் பணிந்து படுத்துக் கொண்டது.

பசித்த புலி பண்டாரத்தை உண்டு மகிழும் என கனவுகண்ட மன்னன் கதி கலங்கிப் போனான். அய்யாவின் அன்புக்கொடி மக்களோ ஆனந்த வெள்ளத்திலே மிதந்தார்கள்.

இப்படி, அய்யாவைப் பல்வேறு சோதனைகள் செய்து தோல்வியுற்ற மன்னன் வேறு வழியே இல்லாமல் அந்த மாயோனை விடுவித்தான்.

மன்னனின் சோதனைகளையெல்லாம் வென்று சாமிதோப்பிற்கு வந்த அய்யா, தன்னையே தந்தையென பாவிக்கும் தம் பக்தர்களையெல்லாம் ஆன்மீக ஞானிகளாக்க வேண்டுமென்றெண்ணி, வாவை பதியிலும், முட்டப்பதியிலும், தவமிருக்க அனுப்பினார். அங்கே தமக்கான ஆடைகளை சலவை செய்து எடுப்பதுபோல், தம் பக்தர்களை பல்வேறு சோதனைகள் மூலம் துவைத்து, தூய்மைப்படுத்தி எடுத்தார். எனவேதான், அந்த தவத்தை துவையல் தவசு என்று சொல்லப்பட்டது.

கொல்லம் ஆண்டு 1008 மாசி மாதம் 20 ஆம் தேதி கலியழிக்க அவதார நாயகனாக எழுந்தருளிய இறைவன், 1016 ஆம் ஆண்டு, என்றென்றும் உலகத்தின் ஜாதகமாக கருதப்படுகிற அகிலத்திரட்டு அம்மானை என்னும் ஆகமத்தை தாமரைக்குளத்துப் பதியில் அரிகோபாலசீசரின் அகமிருந்து எழுதி இந்த உலகத்திற்கு அற்பணித்தார்.

அந்த அகிலத்திரட்டு வாழ்வியல், ஆன்மீகம், அறிவியல், அரசியல் போன்ற எண்ணற்ற பிரச்சினைகளுக்கு வினா எழுப்பி விடையளிக்கிறது.

கற்பு என்பது ஆண், பெண் சம்மந்தமானது மட்டுமல்ல, உலகில் நடைபெற்றுவரும் எல்லா சம்பவங்களுக்கம் கற்பு உண்டு. அவற்றின் கற்பை காப்பாற்றித் தரவேண்டியது மனித குலத்திற்கு மட்டுமே உண்டு. அதுவே, வாழ்வியல் தர்மமாகும். ஆகவே, அந்த கற்பு நிலைகளைக் காப்பாற்றுவதில் மனிதனின் மனக்கதவு கற் கதவாக இருக்க வேண்டும் என்று அந்த கலியுக கீதை கட்டளையிடுவதோடு அதற்கான வழிமுறைகளையும் வகுத்துத்தருகிறது.

காலங்கள் தோறும் கருமங்கள் மாறும். அதாவது, கிரேதாயுகத்தில் தியானத்தால் முக்தி. திரேதாயுகத்தில் தியானமும், யாகமும் செய்தால் முக்தி, துவாபரயுகத்தில் யாகம் செய்தால் முக்தி. கலியுகத்திலோ தர்மம் செய்தால் முக்தி என்பதை புராணங்களும், இதிகாசங்களும், உபனிடதங்களும் உறுதி படுத்துகின்றன.

அதுபோல், இந்தக் கலியுகத்தில் நாம் கடைத்தேறவேண்டுமானால் தருமமே சாலச் சிறந்தது என்பதை, நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் காசை விருதாவில் போட்டு வீணாக்கிவிடாதீர்கள். இரப்போர் முகம்பார்த்து ஈவதுவே நன்றாகும். இறைவன் பெயரைச் சொல்லி யாதொருவர் வந்தாலும் அன்பாக அவர்களுக்கு அன்னமிட்டு பசியமர்த்துவதும், தன்னைவிட தாழ்ந்த நிலையில் வாழ்வோரை தற்காத்துக் கொள்வதுமே தருமம் என்று நமக்கு வழிகாட்டும் அகிலத்திரட்டு தர்மத்திற்கோர் திறவுகோலென்றால் அது மிகையாகாது.

நீங்கள் நல்லவர்களாக வாழவேண்டுமானால் நியாயத்தைக் கடைப்பிடியுங்கள். தாய் தமக்கையென்றோ, தனது கிளைகளென்றோ, வாயுரமாய் பேசும் வம்பரென்றோ ஓரம்பேசிச் சோரம் போய்விடாதீர்கள்.

வலியோரைக் கண்டு மகிழாதீர்கள். எளியோருக்காக இரங்குங்கள். கோபத்தை காட்டாதீர்கள். கோளோடு இணங்காதீர்கள். பாவம் செய்யாதீர்கள். பகட்டு மொழி பேசாதீர்கள். நன்றி மறவாதீர்கள். நான் பெரிதென்று. நினைக்காதீர்கள். விசுவாசத்தை விரோதமாகக் கருதாதீர்கள். எதையும் விபரீத புத்திகொண்டு சிந்திக்காதீர்கள். பொய்யர்களோடு சினேகம் வைக்காதீர்கள். நம்மைச் சுற்றியிருப்பது மட்டுமே உலகமென்று எண்ணாதீர்கள்.



**பூம்பல்லக்கு வாகனத்தில்**
**அய்யா பதிவலம் வருதல்**

இந்த கலியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுடைய உள்ளங்களில் கள்ளத்தனமாக ஊடுருவியிருக்கம் கலி என்பது, உருவமே இல்லாத ஓர் மாயை, அதாவது நினைவு மாய்மாலம். அதை இல்லாமல் ஒழிப்பதற்கு ஆயுதங்களே தேவை இல்லை. நீங்கள் மானத்தோடு வாழ்ந்தாலே உங்கள் உள்ளத்தில் ஊடுருவி அமர்ந்திருக்கும் கலி அழிந்துபோகும். அதற்கு நீங்கள் மனம் வைக்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் மனம் வைத்தால் மாயையாகிய அந்த மாய்மாலக்கலி என்னும் உருவமில்லா அரக்கன் ஒழிந்து போவான்.

ஆகவே, பொல்லாத அந்தக் கலியை வெல்ல நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். தாழ்மையாக நடந்துகொள்ள வேண்டும். எவ்வளவு சொத்து சுகத்திற்கு நீங்கள் அதிபதிகளாக இருந்தாலும் எளிமையைக் கையாள வேண்டும். உங்கள் பொறுமையைச் சோதிக்கத் துணியும் பொல்லாதவர்களையும் நீங்கள் பகைத்து விடாமல் பம்மிப் பதுங்கி ஒதுங்கி வாழ வேண்டும்.

நீங்கள் இப்படிச் செயல்பட்டீர்களேயானால், உங்களைப் பாதிக்கும் செயல்களுக்காக பதற்றப்படாமல் விட்டுவிட்டீர்களேயானால், அதை இறைவன் தன்னுடைய பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, அதற்கான நடுதீர்ப்பை தாம் வழங்குவார்.

இப்படி தருமத்தையும், பொறுமையையும் நீங்கள் எல்லோரும் கையாளும்போது அன்பாகிய பண்பு உங்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஆழமாக அமைந்து இந்த தாரணி தர்மபூமியாகிவிடும்.

அந்த தர்ம ராஜ்ஜியத்திலே ஜாதியில்லை, மதமில்லை, மொழிபேதமில்லை, நிறபேதமில்லை, மனபேதமில்லை, இரவு பகலில்லை, இறப்பு பிறப்பில்லை, எனவே, வயது வரம்புமில்லை, வாதில்லை, சூதில்லை, வஞ்சகப் பொறாமையில்லை, கள்ளமில்லை, கபடமில்லை, கருத்துகளில் பேதமில்லை, வம்பில்லை, வழக்கில்லை, வாதிடுவோர் யாருமில்லை, ஆசையில்லை, அபகபடமில்லை, அநியாயம் அங்கில்லை.

அத்தகைய தர்மயுகத்தை நாமெல்லாம் அடைவதற்கான ஆன்மீக பாலமே அகிலத்திரட்டு ஆகமமாகும்.

இப்படி, தாலமரத்திலையில் தர்மயுக பாலத்தை அமைத்துத்தந்த தயாபரன், இந்த கலியுகத்திற்காக எடுத்த தம் உபாயமாய உடலை உகுத்துவிட்டு வானுறைந்திருந்து நம்மை தர்மயுகத்திற்குத் தேர்ந்தெடுப்பதற்காக, தன்னை தாமே தெய்வங்களென்று சொல்லிக் கொண்டிருக்கும்படி பல விதமான பொய்ச் சொரூபங்களை பூலோகத்திற்கு அனுப்பி வைத்து, அந்த பொய் சொரூபங்களின் பிதற்றல்களுக்குள் நாம் அகப்படுகிறோமா என்று நம்முடைய வாழ்வியலை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த தாரணியை தர்ம சீமையாக்கி ஆள்வதற்கான காலத்தை கணித்துக் கொண்டிருக்கிறார்.

அந்த ஆதிபரனைத்தான் நமெல்லாம் அகமகிழ்ச்சியோடு அய்யா என்று அழைக்கிறோம். இறைவன் என்றாலே எட்டாப் பொருளாக நினைப்பதை விடுத்து, கிட்டே இருக்கம் பெற்றவனாகப் பாவித்துப் பெருமையடைகிறோம்.

மண்ணுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் மனங்களில் மாசுபோல் மண்டிக்கிடக்கும் மாயக்கலியை துடைத்து, நம்மையெல்லாம் மாசற்றமனிதர்களாக்கி தர்மயுகத்தைப் படைப்பதற்காக தாரணியில் மனிதனைப்போல் காட்சியளித்த அந்த வைகுண்டப் பரம்பொருள், பாமரனும் தம்மை பக்தி பூர்வமாக வணங்கி வழிபடுவதற்கேற்றதாக வழிபாட்டு முறையிலும் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தித் தந்துள்ளார். **அதுவே அய்யா வழியாகும்.**

அய்யா வழிபாட்டு ஆலயங்களில், விக்கிரகம் கிடையாது. தெய்வத் திருவுருவப்படங்கள் இடம்பெறுவதில்லை. கற்பூரம், சாம்பிராணி போன்ற தீபதூபங்கள் கிடையாது. தேங்காய் உடைத்தல், எலுமிச்சம்பழத்தை நசுக்குதல், பூசணிக்காயை உடைத்தல் போன்றவை மறுக்கப்பட்டுள்ளது. அரளிப்பூ, நல்லெண்ணை ஆகியவைகளையும் அங்கீகரிக்கப்படவில்லை.

ஆறாயிரத்திற்கு மேற்பட்ட அய்யாவழி ஆலயங்கள் உள்ளன. அந்த ஆலயங்களில் அன்றாடம் பணிவிடைபுரிவோரை பணிவிடையாளர் என்றுதான் சொல்ல வேண்டுமே தவிர பூசாரி என்று சொல்லக் கூடாது. பணிவிடையாளர், குறிப்பிட்ட குலத்தவராகத் தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. காரணம் இங்கே சாதி இல்லை. எனவே, அன்புகொடி மக்களில் யாரும் பணிவிடையாளர் ஆகலாம்.

அய்யா வழிபாட்டில் தர்மமே தலையாய கைங்கரியமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

சென்னை-103, மணலி புதுநகரில் வைகுண்டபுரம் என்னும் திருவிடத்தில், கோபுரம், கொடிமரம், கொடிமர மண்டபம், தியான மண்டபம், அர்த்த மண்டபம், பள்ளியறைவிமானம், பள்ளியறை, பிரகார மண்டபம், ஆகம மண்டபம்,

96 தத்துவக் கால்மண்டபம், ஆயகலை 64 கால் மண்டபம், அய்யா பவனி வர 13 வாகனங்கள், 36 அடி உயரங்கொண்ட கலையம்சம் நிறைந்த திருதேர், வாகனமண்டபம், தென்னைமரங்கள் நிறைந்த பசும் சோலை. அன்பர்கள் தங்கும் மண்டபம், வைகுண்டர் கலையரங்கம் , அன்னதான மண்டபம், மயில்கள் தங்கும் குடில். நிர்வாக அலுவகம் ஆகியவற்றோடு அய்யா வைகுண்ட தர்மபதி அமைந்துள்ளது .

**இந்த தர்மபதியில் நித்த திருவிழாவும் வாகன பவனியும், அன்னதர்மமும் நடைபெறுகிறது.** காலை 6.00 மணி மதியம் 12.00, மாலை 5.30மணி என மூன்று காலப் பணிவிடை நடைபெறுகின்றது. ஞாயிற்று கிழமைதோறும் மதியம் 1.00 மணிக்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு அன்னதானம் நடைபெற்று வருகிறது.

"சலியாமல் காசு தந்தவர்கள் உண்டானால் வாங்கி நீ தர்மம் விரைவாய் தடத்தியிரு" என்ற வைகுண்டப் பரம்பொருளின் வாக்குப் படி, மக்கள் சலிப்பே இல்லாமல் மன நிறைவோடு மேற்படியான தர்மங்களை நடத்தி வருகிறார்கள்.

இந்த தர்மபதிக்கு வந்து, தம் குறையை அய்யா வைகுண்டப் பரம்பொருளிடம் சொல்லி முறையிட்டோருக்கு, அந்த இறைவன் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து, நிறைவாக வாழ வைத்துக்கொண்டிருக்கிறார் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

அந்த தர்மபதி நோக்கி ஆதிமுதல்வனின் அவதாரத் திருநாளாகிய மாசி-20 தேதியன்று சென்னை வண்ணயம் பதியிலிருந்து மக்கள் வெள்ளம் அணிவகுக்க அய்யா வைகுண்டப் பரம்பொருள் அருளிய அகிலத்திரட்டு ஆகமத்தின் தலைமையில் ஒவ்வொரு ஆண்டும் ஆன்மீக ஊர்வலம் செல்கிறது.

ஆகவே, அனைத்து அன்பர்களும், அய்யா வைகுண்டப் பரம் பொருளின் அருள்பெறவாருங்கள்.

மும்மூர்த்தியும் ஒரு மூர்த்தியாய், அகிலாண்ட கோடி உலகாண்ட நாயகனாய், மணலிபுதுநகர் வைகுண்டபுரத்தில் அமைந்துள்ள அய்யா வைகுண்ட தர்மபதியில் இறைவன் அமர்ந்து அருளாட்சி புரிவதைப் பாருங்கள்.

அந்த தயாபரனின் தர்மபதிக்கு எல்லோரும் குடும்பத்தோடு வருகை தந்து, அவரவரால் முடிந்தமட்டும் தர்மத்தைச் செய்து தவத்தைப் பெருக்குங்கள். தர்மயுக வாழ்வை எல்லோரும் தக்க வைத்துக்கொள்ளுங்கள்.

ஓர் உலகம், ஒரே தெய்வம், ஒரு குடை, ஓர் ஆட்சி, ஒரு மொழி, ஒரே குலம், என்றஅய்யாவின் ஒப்பரிய தத்துவத்திற்கு நாமெல்லாம் வித்துகளாக வேரூன்றுவோம்.

வாரீர்....... வாரீர்....... வாரீர்.......

**மணலி புதுநகர் அய்யா வைகுண்ட தர்மபதியின் திருவிழாக்கள்**

- கோபுர ஆண்டு திருவிழா பெப்ரவரி முதல் ஞாயிறுகிழமை
- அய்யா அவதார தின திருவிழா தமிழ்மாதம் மாசி 20ஆம் தேதி.
- தர்மவான்களுக்கு சிறப்பு செய்தல் ஜீன் மாத கடைசி ஞாயிற்றுகிழமை
- திருஏடு வாசிப்பு 10நாள் திருவிழா அக்டோபர் மாதம் முதல் வெள்ளிகிழமை திருநாம கொடியேற்றத்துடன் தொடங்கி 10 நாட்கள் நடைபெறும் , 10வது நாள் திருதேர் திருவிழா
- அகில திரட்டு உதைய திருவிழா தமிழ் மாதம் கார்த்திகை 27ஆம் தேதி.



வளர்க அய்யா வழி
அய்யா துணை
மலர்க தர்மயுகம்
ஸ்ரீ நெல்லை பிரிண்டர்ஸ், சென்னை - 81.
போன் : 044-25954416